1993 ஏப்ரல் 22] [திரு.கு. ப. கிருஷ்ணன்]

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் புரட்சித் தலைவியின் பெயர் கொண்ட ஜெ. ஜே. 92 வாசனை அரிசியில் தயாரித்த புலவும், குளுமை தயிர் சாதமும், பச்சைக் காய் கறித் துண்டுகளும், பருகுவதற்கு ஆவின் பாலும் பாங்குடனே வழங்கப்படவுள்ளன. அந்தச் சிறிய அமுதை அகமகிழ்வோடு ஏற்றுக் கொள்ளத் தாங்கள் அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி அளிக்கப் பட்டது. (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு உறுப் பினர்களின் சார்பில் நன்றியையும் தெரிவித்துக் கொள் கிறேன். (குறுக்கீடு) இப்போதும் உண்டு; பிறகும் உண்டு (சிரிப்பு).

2. அறிவிப்பு—தொடர்ச்சி.

(இ) கைது செய்யப்பட்ட இரு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காலையில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டு, காவல் நிலையத்தில் வைக்கப் பட்டிருந்ததாகவும், காவல் நிலையத்திலிருந்தே அவர்கள் சொந்த ஜாமீனிலேயே செல்லலாம் என்று காவல் துறையினர் போகலாம் என்று சொன்னதற்குப் பிறகும் அவர்கள் போக மறுத்து காவல் நிலையத்திலேயே இருக்கிறார்கள் என்றும் பேரவைக்கு அறிவித்திருந்தேன்.

சற்றுமுன் கிடைத்த தகவலின்படி, அவர்கள் காவல் நிலையத்திலேயிருந்து போக மாட்டோம் என்று சொன்ன காரணத்தால், நீதிமன்றத்திற்குக் கொண்டுசென்று, நீதிமன் றத்தால் அவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள், அங்கிருந்து சென்றிருக்கிறார்கள் என்கிற தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. வி.கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பி.வி. இராஜேந்திரன் என்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினரைக் காணவில்லை, போலீஸ் அவர்களைத் தேடிக் கொண்டிருக்கிறது என்று சொன்னீர்கள். ஆகவே அவர் கிடைத் தாரா என்ற தகவலையும் அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றிய தகவல் வந்தவுடன் அதைப்பற்றியும் தெரிவிக்கிறேன். இப்போது அது பற்றி எந்தத் தகவலும் இல்லை.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4.30

மாலை 4.30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

6. மானியக் கோரிக்கைகள், 1993-94, விவாதமும் வாக்கெடுப்பும்——தொடர்ச்சி.

(ஈ) கோரிக்கை எண். 20—வேளாண்மை.

(உ) கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு.

(ஊ) கோரிக்கை எண். 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடர்கிறது. திரு. எஸ். ஆசைமணி.

*திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1992-93 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் நெல் உற்பத்தியிலே தமிழகத்திலே முதலிடம் வகிக்கின்ற நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய விவசாயிகளின் சார்பாக, அந்த மாவட்டத்திலே ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்தவன் என்ற முறையில், இங்கே வேளாண்மைத் துறை பற்றிப் பேசுவதற்கு நான் மெத்த பெருமைப் படுகின்றேன். அந்த அளவுக்கு எனக்கு இங்கே பேச வாய்ப்புக்